இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 14-10-2025

# காசாவில் நிரந்தர அமைதி!

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு காசாவில் வெடிச் சத்தம் நின்றிருக்கிறது. இது தற்காலிக அமைதிதான். அதனை நிரந்தர அமைதியாக ஆக்கும் கடமையும், பொறுப்பும் உலக நாடுகள் கையில் இருக்கிறது. குறிப்பாக இஸ்ரேல் கையில் இருக்கிறது.

2021 ஆம் ஆண்டும் இதே போன்ற போர் நிறுத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் அது நீடிக்கவில்லை. போர் தொடங்கியது. 2023-ஆம் ஆண்டும் போர் நிறுத்தம் செய்யப்பட்டது. அதுவும் நீடிக்கவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக உலகம் பார்த்த கொடுமையானது, மகா கொடுமைகள் ஆகும்.

**கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காசா பகுதியில் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளார்கள். கொல்லப்பட்டவர்களில் 17 ஆயிரம் பேர் குழந்தைகள். 11 ஆயிரம் பேர் பெண்கள். 26 ஆயிரம் குழந்தைகள் தங்கள் பெற்றோரை இழந்துள்ளார்கள். 175 பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். 125 ஐ.நா. ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். காசாவின் பெரும்பகுதி ஓராண்டு காலத்துக்குள் அழிக்கப்பட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும்.**

உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக நின்று கொண்டிருந்த 45 பேரை இஸ்ரேல் ராணுவம் சுட்டுக் கொன்றது. பட்டினியால் வாடும் பாலஸ்தீனர்கள் உணவுப் பொருள் ஏற்றி வரும் லாரியை எதிர்பார்த்துக் காத்திருந்த போது அவர்கள் மீது இந்த தாக்குதல் நடந்தது. இதைவிடக் கொடூரம் இருக்க முடியாது.

காசாவில் மரணத்தின் விளிம்பில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு வழங்க உணவுப் பொருட்கள், மருந்துகள், குழந்தைகளுக்கான பால் பவுடர்களைக் கொண்டு சென்ற தன்னார்வலர்களைக் கடந்த வாரம் கடத்தியது இஸ்ரேல். இந்த கப்பலில் 47 நாடுகளைச் சேர்ந்த தன்னார்வலர்கள் சென்றுள்ளார்கள். அவர்களை தடுத்து கைது செய்துள்ளார்கள். இவை சர்வதேச சட்டங்களை மீறும் செயல் ஆகும். இப்படி ஒட்டுமொத்தமாக மனித உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும்தான் காசா பகுதியில் நடந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இந்த வாரத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இம்முறை அமெரிக்க அதிபர் டிரம்ப் தலையிட்டார். அவர் இப்பேச்சு வார்த்தைகளில் அதிக முனைப்புக் காட்டினார். இது போர் நிறுத்த அறிவிப்பாக முடிந்தது. போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை எகிப்து தலைநகர் கெய்ரோவில் அமெரிக்க அதிபர் டிரம்ப் தலைமையில் நடைபெற்றது. இதன் முடிவில் இருதரப்பினருக்கும் இடையே 20 அம்ச ஒப்பந்தம் கையெழுத்தானது. போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு இஸ்ரேல் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

"காசாவில் போர்நிறுத்த ஒப்பந்தம் தொடங்கியது" என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்த பிறகுதான் நம்பிக்கை ஏற்பட்டது. "போர்நிறுத்த ஒப்பந்தம் அமலுக்கு வந்துவிட்டது. எனவே, பிணைக்கைதிகளை விடுதலை செய்யும் பணி நடந்து வருகின்றது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் இடமாற்றம் செய்யப்படுகிறார்கள். தெற்கு பகுதியில் இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு அச்சுறுத்தல் கொடுத்தாலும் இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் தக்க பதிலடி கொடுப்பர்" என்று இஸ்ரேல் ராணுவத்தின் அறிவிப்பு இதனை உறுதி செய்தது.

● **காசாவிடம் தற்போது உயிருடன் உள்ள 20 பணய கைதிகளை இஸ்ரேலிடம் ஒப்படைப்பது, காசாவில் நிறுத்தப்பட்டு உள்ள இஸ்ரேல் ராணுவத்தை பின் வாங்குவது, நீண்ட காலமாக இஸ்ரேல் சிறையில் உள்ள 250 பேர் மற்றும் போரின்போது சிறைபிடிக்கப்பட்ட 1,700 பேரை விடுவிப்பது என இருதரப்பினரும் ஒப்பந்தத்தில் கூறியதை நிறைவேற்றி வருகின்றனர்.**

காசாவில் இருக்கும் இஸ்ரேல் படைகள் திரும்பப்பெறப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக மக்கள் வடக்கு காசாவில் உள்ள தங்களது இருப்பிடங்களுக்கு நடந்தே செல்கின்றனர். ஒப்பந்தத்தின் விளைவாக, பிணைக் கைதிகளை இரண்டு தரப்பும் விடுவிக்கும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

**ஹமாஸ் அமைப்பினர் கட்டுப்பாட்டில் உள்ள பிணைக் கைதிகள் விடுவிக்கப்படும் நடவடிக்கையை வரவேற்று, இஸ்ரேல் மக்கள் கொண்டாடி மகிழ்ந்தனர். தலைநகர் டெல் அவிவில் உள்ள பிணைக் கைதிகள் சதுக்கத்தில், பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.**

ஹமாஸ் தரப்பு தனது ஆயுதங்களை ஒப்படைப்பது போன்ற சிக்கலான விவரங்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. காசாவை நிர்வகிக்கப் போவது யார் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. 'ஹமாஸ் படைகள் ஆயுதங்களை துறக்காவிட்டால், மீண்டும் தாக்குதல் நடத்தப்படும்' என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு எச்சரித்துள்ளார். இது போன்ற கொக்கரிப்புகள்தான் பிரச்சினைகளை மறுபடியும் உருவாக்கும். இந்த எதேச்சதிகாரத் தனத்தை இஸ்ரேல் நிறுத்த வேண்டும். இது போன்ற விவகாரங்களை உலக நாடுகள் பேச வேண்டுமே தவிர இஸ்ரேல் பேசக் கூடாது. இஸ்ரேலை பேச விடவும் கூடாது.

பாலஸ்தீனத்தை தனி நாடாக பெரும்பாலான நாடுகள் அங்கீகரித்திருக்கின்றன. இதனால்தான் இஸ்ரேல் கொஞ்சம் அடங்கத் தொடங்கி இருக்கிறது. இந்த அடக்கம், நிரந்தர அடக்கம் ஆக வேண்டும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சென்னையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், **"இந்த மோசமான நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருத்துவம் உள்ளிட்ட அனைத்து அவசிய உதவிகளும் உடனடியாக முழுமையாக வழங்கப்பட வேண்டும். பாலஸ்தீனர்களின் மறுவாழ்வுத் திட்டம் - காசாவை மறு கட்டமைப்பு செய்வது - மனிதாபிமான உதவிகளை தொடர்ச்சியாக வழங்குவது ஆகியவை குறித்து தெளிவான வாக்குறுதிகள் வழங்கப்பட வேண்டும். உலக நாடுகள் முன் வைக்கும் நிபந்தனைகள், உறுதிமொழிகள் பாலஸ்தீன மக்களுக்கு நன்மை செய்வதாக அமைய வேண்டும்"** என்று சொல்லி இருக்கிறார். இவைதான் நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உதவி பொறியாளர் (மின்), இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 83 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

## சட்டத்துறை சார்பில் ரூ.55.68 கோடியில்

# மதுரை - வேலூர் சட்டக் கல்லூரிகளில் புதிய கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

**சென்னை, அக். 14 -**

**சட்டத்துறை சார்பில் ரூ.55.68 கோடி செலவில் மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கான புதிய கல்விசார் மற்றும் நிருவாக தொகுதி கட்டடங்கள், வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் புதிய நூலகக் கட்டடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், சட்டத்துறை சார்பில் மதுரை அரசு சட்டக் கல்லூரியில் 48 கோடியே 20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் மற்றும் நிருவாக தொகுதி கட்டடங்கள் மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் 6 கோடியே 46 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடம் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

நீதித்துறையின் மேம்பாட்டிற்காக இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து, நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் அரசு சட்டக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, புதிதாக பல்வேறு இடங்களில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல், அரசு சட்டக் கல்லூரிகளுக்கு புதிய கூடுதல் கட்டடங்கள் கட்டுதல், நூலகங்களுக்கு புதிய புத்தகங்கள் வழங்குதல், தமிழ்நாடு வழக்கறிஞர் நலநிதியத்திலிருந்து உயிரிழந்த வழக்கறிஞர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் நிதியுதவியை 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது, உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கான புதிய கல்விசார் மற்றும் நிருவாக தொகுதி கட்டடம்!**

மதுரை மாவட்டம், தல்லாகுளம், தங்கராஜ் சாலையில் 1,35,088 சதுர அடி பரப்பளவில் 48 கோடியே 20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கான புதிய கல்விசார் மற்றும் நிருவாக தொகுதி கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இப்புதிய கட்டடம் 25 வகுப்பறைகள், கருத்தரங்கு மண்டபம், காணொளி காட்சி அறை, சொற்பொழிவு அறை, உள்விளையாட்டு அரங்கம், மாணவ, மாணவியருக்கு தனித்தனி ஓய்வு அறைகள், மாதிரி நீதிமன்ற அரங்கம் மற்றும் நவீன தரத்தில் கல்லூரி அலுவலகம் ஆகிய பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

**வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கான புதிய நூலகக் கட்டடம்!**

2022-2023ஆம் ஆண்டிற்கான சட்டத்துறை மானியக் கோரிக்கையில், வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு புதிய நூலகம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், காந்தி நகரில் 20,000 சதுர பரப்பளவில் 6 கோடியே 46 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் வேலூர் அரசு சட்டக் கல்லூரிக்கு தரை மற்றும் இரண்டு தளங்களுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இக்கட்டடம் மாணவர்களுக்கான குறிப்புதவி பிரிவு, புத்தகங்கள் வழங்கும் பிரிவு, அதிவேக இணையதள வசதியுடன் கூடிய மின் மண்டலம், கருத்தரங்கு கூடம் மற்றும் நூலகர் அறை போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சட்டத் துறைச் செயலாளர் சி.ஜார்ஜ் அலெசாண்டர், சட்டக் கல்வி இயக்குநர் முனைவர் ஜெ.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ரூ.43.88 இலட்சம் செலவில்

# "அரண்" திருநங்கையர்களுக்கான இல்லங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, அக். 14 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.10.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் சென்னை - செனாய் நகர் மற்றும் மதுரை மாநகர் - அண்ணா நகர் ஆகிய இடங்களில் 43.88 இலட்சம் ரூபாய் செலவிலான "அரண்" திருநங்கையர்களுக்கான இல்லத்தினை திறந்து வைத்தார்.**

**திருநங்கையர்களின் நலன் காத்திட தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்கள்!**

சமூகத்தில் திருநங்கையர்கள் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் வாழ வேண்டும் என்ற உயரிய நோக்குடன், மரபு சார்ந்த "அரவாணிகள்" என்ற சொல்லுக்கு மாற்றாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "திருநங்கை" என்ற மரியாதைக்குரிய சொல் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

திருநங்கைகளுக்கும் முழுமையான சமூகப் பாதுகாப்பையும் அங்கீகாரத்தையும் வழங்கி, அவர்களின் உழைப்பையும் பங்களிப்பையும் அங்கீகரிக்கும் விதமாக, 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று தமிழ்நாட்டில் "திருநங்கைகள் நல வாரியம்" முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்டது. இந்த வாரியத்தை அமைத்த முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

திருநங்கையர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக, தமிழ்நாடு அரசு திருநங்கைகள் நல வாரியத்தின் வாயிலாக திருநங்கை அடையாள அட்டைகள் வழங்குதல், ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதம் ரூ.1,500 ஓய்வூதியம் வழங்குதல், குடும்ப அட்டை, வீட்டு மனைப் பட்டா, மருத்துவக் காப்பீடு வழங்குதல், தையல் இயந்திரம் மற்றும் சொந்த தொழில் தொடக்க மானியம் வழங்குதல், சுயஉதவிக்குழு அமைத்தல் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்குதல், அரசு பேருந்துகளில் கட்டணமில்லா "விடியல் பயணம்" "திருநங்கைகளுக்கான உயர்கல்வி திட்டம்" மூலம் உயர்கல்வி பயிலும் திருநங்கைகளின் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கல்விச் செலவுகளையும் அரசே ஏற்றுக்கொள்வதோடு, புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மாதம் ரூ.1,000 கல்வி ஊக்கத் தொகை, உயர்கல்வி பயிலும் அனைத்து திருநங்கைகளுக்கும் விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**'அரண்' இல்லங்கள் திருநங்கையருக்கு பாதுகாப்பான மற்றும் ஆதரவான வாழ்விடங்கள்!**

திருநங்கைகள் நலன் காத்திடும் தொடர் நடவடிக்கைகளின் அடுத்த படியாக, திருநங்கைகள் எதிர்நோக்கும் சமூக, மனநலம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த சவால்களை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு பாதுகாப்பான, மதிப்பும் மரியாதையும் நிறைந்த, ஆதரவான வாழ்விட சூழலை உருவாக்கும் நோக்கில், தமிழ்நாடு அரசு "அரண் இல்லம்" எனப்படும் சிறப்பு மையங்களை நிறுவத் தீர்மானித்து, முதற்கட்டமாக, சென்னை - செனாய் நகர் மற்றும் மதுரை மாநகர் - அண்ணா நகர் ஆகிய இடங்களில் 43.88 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அரண் இல்லங்களை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்கள்.

**அரண் இல்லத்திற்கான தேவை!**

பாலினம் அடையாளம் காணும் பருவத்தில், பயம் மற்றும் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு, குடும்பம் மற்றும் கல்வியில் இருந்து விலகி, ஆதரவற்று நகரங்களுக்கு வரும் திருநங்கை/திருநம்பி/இடைபாலினரை பாதுகாக்கவும், அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கவும் இது அவசியமாகிறது.

**முக்கிய நோக்கங்கள்!**

குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்ட 18 வயதுக்கு மேற்பட்ட திருநங்கை/திருநம்பி/இடைபாலின நபர்களுக்கு 1 வாரம் முதல் அதிகபட்சம் 3 ஆண்டுகள் வரை பாதுகாப்பான மற்றும் தற்காலிக தங்குமிடம் வழங்குதல் தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தின் அடையாள அட்டை பெற்ற எந்த மாவட்டத்தைச் சேர்ந்த நபரும் பயன்பெறுவதோடு, ஒவ்வொரு இல்லத்திலும் 25 நபர்கள் தங்க அனுமதிக்கப்படுவர்.

மேலும், இந்த இல்லங்களில், உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பள்ளி மற்றும் கல்லூரியில் இடைநின்றவர்கள் கல்வியைத் தொடர உதவுதல், உயர் கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்துதல், உள்ளுறைவோரின் தேவைகளுக்கேற்ப உளவியல் மற்றும் தொழில்முறை ஆலோசனைகள் வழங்குதல், சுயதொழில் தொடங்க வழிகாட்டுதல் மற்றும் நிதியுதவி வழங்குதல், திருநங்கையருக்கு எதிரான வன்முறை, பாகுபாடுகள் குறித்து புகார் அளிக்க உதவுதல், இலவச சட்ட உதவி மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், குடும்பத்தால் நிராகரிக்கப்பட்டவர்களை மீண்டும் குடும்பத்துடன் இணைக்க முயற்சித்தல் மற்றும் குடும்பத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவை ஒருங்கிணைந்த முறையில் வழங்கப்படும்.

தமிழ்நாடு அரசின் இந்தத் தொடர்ச்சியான நடவடிக்கைகள், திருநங்கையர் சமூகத்தின் வாழ்வில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது.

இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கூடுதல் செயலாளர், திருமதி. வளர்மதி, சமூக நலத் துறை இயக்குநர் திருமதி. மா. சௌ.சங்கீதா மற்றும் சமூக நலத் துறை கூடுதல் இயக்குநர் திருமதி. சரண்யா அறி ஆகியோர் கலந்து கொண்டனர்.